# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO. 124/2020

**30.10.2023 - பி.வா.சா. 1 அண்ணாதுரை சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் வெள்ளைய கவுண்டருக்கு பூர்வீகமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அவருக்கு 5 ஆண் பிள்ளைகள் அய்யாசாமி, சுப்பிரமணி, வேலு, பழனி மற்றும் அண்ணாதுரையாகிய நான் மற்றும் 2 பெண் பிள்ளைகள் மல்லிகா மற்றும் அம்மாகன்னு ஆவர்கள். என் தகப்பனார் 20.12.2001ல் இறந்து விட்டார். அவர் உயிருடன் இருக்கின்ற வரையில் அவரும் அவரது 5 ஆண் பிள்ளைகளும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர் இறக்கின்ற வரையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 16.9.2000ல் வாய் மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது. அது சம்மந்தமாக பத்திரம் எழுதப்பட்டது. ஆனால் அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை.

குடும்ப கஷ்டத்தால் பதிவு செய்யப்படவில்லை. அன்றைய தினம் பதிவு செய்வதற்கு ரூ. 15 ஆயிரம் செலவாகும் என்று கூறினார்கள். எங்கள் 6 பேருக்கும் பதிவுக் கட்டணம் செலுத்துவதற்கு வசதி இல்லை. பி.வா.சா.ஆ.2 ஐ காட்டி இதுதான் பாகம் ஏற்பட்ட பத்திரமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. நான் செல்வது போது பாகப்பத்திரமே ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.3 பட்டா எனக்கு நேரடியாக தெரியாது. என் அப்பா தான் முன்நின்று அனைத்தையும் செய்தார். என் அப்பா மனு கொடுத்த விவரம் தெரியும். பட்டா மாற்றம் செய்வதற்கு நான் மனு கொடுக்கவில்லை. பட்டா மாற்றம் என் அப்பா மனு கொடுத்ததின் அடிப்படையில் ஏற்பட்டது. பி.வா.சா.ஆ.2ன் மூலம் என் தகப்பனாருக்கு புதிய சர்வே எண் 2/6ல் 7 செண்ட் ஒதுக்கப்பட்டது. ஆனால் என் தகப்பனாருக்கு 2/6சின்படி 4 ஏர்ஸ் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2/16பி-ல் என் தகப்பனாருக்கு 2.5 ஏர்ஸ் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

என்னுடைய பாகத்திற்கு 62 செண்ட் கொடுக்கப்பட்டது. எந்தெந்த சர்வே எண்ணில் 62 செண்ட் அமைந்துள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. பி.

வா.சா.ஆ.2 ல் புதிய சர்வே எண் 2/13 ல் எனக்கு 5 செண்ட் ஒதுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ.3 முன்னிலைக்கு 2/13 பி - ல் 1 ஏர்சுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2ல் 2/14ல் 2 செண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேலும் பி.வா.சா.ஆ.2ன் அடிப்படையில் சர்வே எண் 2/6 ல் 10 செண்டில் 3 1/4 செண்டு எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. என் சகோதரர் பழனிக்கு எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது போல் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தை சர்வே எண் படி அளக்கவில்லை. என் சகோதரர் வேலுவிற்கு அதே அளவிற்கு தான் சொத்து கொடுக்கப்பட்டது. பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கும், பட்டாவில் கண்டுள்ள சொத்திற்கும் விஸ்தீரணம் மாறுபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பி.வா.சா.ஆ. 3 பட்டா வழங்குவதற்கு முன்னர் என் அப்பாவை மட்டும் தான் அதிகாரிகள் விசாரித்தார்கள், குடும்ப உறுப்பினர்களை வேறு யாரையும் விசாரிக்கவில்லை. பட்டா மாற்றமே தவறானவை என்று சொன்னால் சரியல்ல. பட்டாவை யாரும் தனித்தனியாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- அண்ணாதுரை

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.